0038

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**கல்விப்பீடம்**

**விசேட தேவைகள் கல்வியில் கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2025/2026**

**இறுதிப்பரீட்சை- 2026**

**மட்டம் - 06**

**SNU6225– புனர்வாழ்வு மற்றும் சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வும்**

**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

**திகதி:-30.06.2026** **நேரம்: மு.ப 09.30 - பி.ப 12.30**

**பகுதி I இல் சகல வினாக்களுக்கும், பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.**

## பகுதி - I

1. புனர்வாழ்வு (Rehabilitation) என்பதை வரையறுத்து, அதனை ஒரு பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக.

2. குறைபாடு மற்றும் இயலாமை ஆகிய பதங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை, ஒரு உதாணத்தை முன்வைத்து விளக்குக.

3. உலக சுகாதார அமைப்பு (1980) “அங்கவீனம்” (Handicap) என்பதை எவ்வாறு வரையறுக்கிறது என்பதை விளக்குக.

4. சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வின் (CBR) முதன்மை நோக்கத்தைக் குறிப்பிடுக.

5. இயலாமையுடையோருக்கு அதிகாரமளிக்கும் செயல்பாட்டில் அரசியல் பங்கேற்பு என்பது என்ன என்பதை விளக்குக.

6. பண்டைய இலங்கையில் இயலாமையுடையோர் பற்றிய **மூன்று (03)** மூடநம்பிக்கைக் கதைகளைச் சுருக்கமாக விளக்குக.

7. இலங்கையில் இயலாமையுடைய குழந்தைகளைப் பாதிக்கும் **மூன்று (03)** சட்டங்களைப் பட்டியலிட்டு, அவற்றில் ஒரு சட்டத்தை விளக்குக.

8. தேவையான சான்றுகளைப் பயன்படுத்தி, தனிநபர்கள் அங்கவீனமுடையோர்களாக மாறக்கூடிய **மூன்று (03)** வழிகளைச் சுருக்கமாக விளக்குக.

**(08 x 05 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. **அ.** இயலாமையுடையோருக்கான மருத்துவ மாதிரி மற்றும் சமூக மாதிரி ஆகியவற்றை உங்கள் சொந்த மொழியில் வரைவிலக்கணப்படுத்துக. **(05 புள்ளிகள்)**

**ஆ.** “பிரெய்ல் கற்றல் வளங்கள் இல்லாததால், பார்வைக் குறைபாடுள்ள ஒரு மாணவரால் பாடசாலையில் கற்றல் பொருட்களை அணுக முடியவில்லை. அங்கவீனம் என்பது தனிநபரை விட சமூகத்தாலேயே அதிகம் உருவாக்கப்படுகிறது.”

இந்தச் சூழ்நிலையை, இயலாமைக்கான மருத்துவ மாதிரி மற்றும் சமூக மாதிரி ஆகிய இரண்டையும் பயன்படுத்தி, பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. **(07 புள்ளிகள்)**

**இ.** சமூகத்தில் இயலாமையுடையோர் எதிர்கொள்ளும் **ஐந்து (05)** தடைகளைப் பற்றி ஆராய்ந்து, சமூக மாதிரியின் அடிப்படையில் நடைமுறைத் தீர்வுகளைப் பரிந்துரைக்கவும். **(08 புள்ளிகள்)**

10. அ. சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு (CBR) என்பதை வரைவிலக்கணப்படுத்தி, அதன் முக்கிய கூறுகளைச் சுருக்கமாக விபரிக்குக. **(05 புள்ளிகள்)**

ஆ. இலங்கையில் உள்ள ஆரம்பக் கல்விப் பாடசாலை அமைப்புக்களில் இயலாமையுடைய மாணவர்களுக்கான ஆரம்பகாலக் கண்டறிதல் மற்றும் தலையீட்டிற்கு சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வுத் திட்டங்கள் எவ்வாறு உதவ முடியும் என்பதைப் பகுப்பாய்வு செய்க. **(07 புள்ளிகள்)**

இ. சமூக மட்டத்தில் சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு (CBR) திட்டங்களைச் செயல்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்களை விமர்சன ரீதியாக ஆராய்ந்து, இந்தச் சவால்களை எதிர்கொள்ள நடைமுறை உத்திகளை முன்மொழிக. **(08 புள்ளிகள்)**

11. அ. இயலாமையுள்ள மாணவர்களுக்கான உள்ளடங்கல் நடைமுறைகளை ஊக்குவிப்பதில் பாடசாலைகளின் பங்கை விளக்குக. குறைந்த பட்சம் **நான்கு (04)** முக்கியப் பொறுப்புக்களை முன்வைக்குக. **(05 புள்ளிகள்)**

ஆ. இயலாமையுள்ள பிள்ளைகளின் புனர்வாழ்வு செயற்றிட்டத்தின் விளைவுகளை மேம்படுத்துவதில் குடும்பங்களின் பங்களிப்பை மதிப்பிடுக. உங்கள் பதிலுக்குத் தொடர்புடைய எடுத்துக்காட்டுக்களை முன்வைக்குக. **(07 புள்ளிகள்)**

இ. சமூக மனப்பான்மைகள் எவ்வாறு உள்ளடங்கலைப் பாதிக்கின்றன என்பதை விவாதித்து, இயலாமையுடைய பிள்ளைகள் மீதான நேர்மறையான மனப்பான்மைகளை ஊக்குவிக்க, சான்றுகள் அடிப்படையிலான **மூன்று (03)** உத்திகளை பரிந்துரை செய்க. **(08 புள்ளிகள்)**

12. அ. இயலாமையுடைய பிள்ளைகளுக்கான தகுதியை நிர்ணயிப்பதிலும், கல்வி உதவிகளை வழங்குவதிலும் இயலாமையுடையவர்களுக்கான கல்விச் சட்டத்தின் (IDEA) பிரிவு 504 மற்றும் புனர்வாழ்வுச் சட்டம் (1973) ஆகியன எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை விளக்குக. **(05 புள்ளிகள்)**

ஆ. சாதாரண வகுப்பறைச் சூழல்களில் இயலாமையுடைய மாணவர்களுக்குப் பொருத்தமான இடமளித்தல் மற்றும் உதவிச் சேவைகள் வழங்குவதை ஆராய்க. **(07 புள்ளிகள்)**

இ. இயலாமையுடைய மாணவர்களுக்கான மாற்றத் திட்டமிடலை (எ.கா.. IEP உருவாக்கம், தொழிற்பயிற்சி உருவாக்கம், சமூக இணைப்பு) எளிதாக்குவதில் பாடசாலைகளின் பங்கை விமர்சன ரீதியாக மதிப்பிடுக. **(08 புள்ளிகள்)**

13. அ. கல்வி அமைப்பிற்குள் இயலாமையுடைய பிள்ளைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு ஆதரவளிப்பதில் பாடசாலைகளின் பொறுப்பு குறித்து ஆராய்க. **(05 புள்ளிகள்)**

ஆ. புனர்வாழ்வில், குறிப்பாக நிஜ வாழ்க்கை விளைவுகளுடன் கூடிய வகுப்பறைக் கற்றலில், வழக்கமான வகுப்பறை ஆசிரியர்களின் பங்களிப்புக்களைப் பகுப்பாய்வு செய்க. **(07 புள்ளிகள்)**

இ. இயலாமையுடைய பிள்ளைகளுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் வெளிப்புற நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை மதிப்பீடு செய்க. **(08 புள்ளிகள்)**

14. அ. இயலாமையுடையோருக்கான மனித உரிமைகள் தொடர்பாக அரசின் **மூன்று (03)** முக்கிய செயல்பாடுகளை விளக்குக. **(05 புள்ளிகள்)**

**ஆ.** அனைவரையும் உள்ளடக்குதல் மற்றும் சம வாய்ப்புக்களை ஊக்குவிப்பதில் இலங்கையின் இயலாமையுடையோருக்கான தேசியக் கொள்கையின் (2003) அடிப்படைக் கோட்பாடுகளைப் பகுப்பாய்வு செய்க. **(07 புள்ளிகள்)**

**இ.** இலங்கைச் சூழலில் இயலாமையுடையோர்கள் தொடர்பான கொள்கைகள் மற்றும் மனித உரிமைக் கட்டமைப்புக்களைச் செயல்படுத்துவதில் உள்ள சவால்கள் மற்றும் சாத்தியக்கூறுகளை மதிப்பீடு செய்க. **(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமைபெற்றது* -